**தலைப்பு 436 – வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடய இலக்கம் 436-1-2-0-1404-11 கீழ் மதிப்பீட்டு ஏற்பாடுகள் ரூபா 32,000,000 தொகையாக காணப்பட்டதுடன், நி.பி. 66 இன் மூலம் ரூபா 15,530,000 தொகைக்கான ஏற்பாடுகள் அகற்றப்பட்ட பின்னரும் ரூபா 3,738,109 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | போக்குவரத்து அமைச்சு நடாத்தப்பட்டு வந்த கட்டிடத்தில் இராஜாங்க அமைச்சும் நிறுவப்பட்டது. அதன் காரணமாக அந்த இடத்தில் வாடகை செலுத்த வேண்டிய தேவை காணப்படாமையால் வீதவரி மாத்திரம் செலுத்தி இந்த கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால் இந்த செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | தேவைப்பாட்டினை சரியாக இனங் கண்டு பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது மற்றும் ஏற்பாடுகளை நிச்சயிக்கப்பட்ட கருமத்திற்காக ஈடுபடுத்துவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டியிருந்தது. |
| (ஆ) | 02 செலவு விடயங்களுக்காக ரூபா 395,000,000 இற்கான மதிப்பீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செலவுகள் ஏதும் மேற்கொள்ளாமல் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | 436-1-1-0-1102<br>436-1-2-0-1102<br>வெளிநாட்டு பிரயாணங்கள் வரையறுக்கப்பட்டிருந்தமையால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் செலவிடப்படாமை. | தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்கண்டு பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 15 செலவு விடயங்களுக்காக ரூபா 2,103,560,000 இற்கான மதிப்பீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 450,512,388 தொகை சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அது மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 13 சதவீதம் முதல் 97 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இபொச இற்கு பஸ் வண்டி இறக்குமதிக்கான பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. | நிதியம் ஏற்பாடு செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக குறிப்பிட்ட காலப் பகுதியில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| **இலங்கை சனநாயக சோசலிச குடியசரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| நிதிப் பிரமாணம் 880 | பிணை வைப்புச் செய்ய வேண்டிய பணம் மற்றும் களஞ்சியத்திற்கு பொறுப்பாக உள்ள உத்தியோகத்தரினால் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை. | அமைச்சுக்காக நிரந்தர பதவியணி ஒன்று காணப்படாததுடன், 2022 ஆண்டு முதல் நிரந்தர பதவியணி ஒன்றாக அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்களிடம் பிணைப்பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்து சபைக்காக பஸ் வண்டிகள் இறக்குமதி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 3692 மில்லியனிற்கான மதிப்பீடு ஒன்றின் கீழ் 2019 முதல் 2021 ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் போக்குவரத்து இராஜாங்க அமைச்சு ஆரம்பிக்கப்பட்ட 2020 ஆண்டு முதல் செயற்படுவதற்கு இராஜாங்க அமைச்சுக்கு சாட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஆண்டில் இதற்காக ரூபா 850 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்காக எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றம் 55% ஆக காணப்பட்டது. எனினும், மீளாய்வாண்டு இறுதி வரையில் ஏற்பாடு செய்திருந்த தொகையில் செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றத்தையும் நெருங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பெறுகை அலுவல்கள் தாமதம் அடைந்திருந்ததுடன், இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இபொச விற்கு பஸ் வண்டிகள் கொள்வனவு செய்வதற்கான பெறுகையின் கடைசிக் கட்டமாகிய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், 2021.12.02 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2022.01.11 திகதியே அது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக குறிப்பிட்ட நிதி வருடத்தின் எதுவும் மேற்கொள்ள முடியாமல் போனதால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்ட போதிலும் இதுவரை அந்த பெறுகைக்குரிய வழங்குனருடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு நாணயக் கடிதமும் திறக்கப்பட்டதென அறிவிக்கின்றேன். | பாதீட்டு ஏற்பாடுகள் உரிய முறையில் வினைத்திறனுடன் குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்த வேண்டியிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது இலங்கை போக்குவரத்து சபைக்கு மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 11,823 மில்லியன் தொகை மற்றும் மூலதனச் செலவுகளுக்காக ரூபா 2,405 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றில் மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவுகள் என ரூபா 11,407 மில்லியன் தொகை மற்றும் மூலதனச் செலவுகளை என ரூபா 1,321 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | இலங்கை போக்குவரத்து சபைக்காக திறைசேரியில் இருந்து வழங்கப்படும் ஏற்பாடுகளின் மூலம் செலவுகள் மூலதனம் மற்றும் மீண்டுவரும் என வகைப்படுத்தி அறிக்கைகள் பேணும் படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அந்த அறிக்கைகள் பெற்றுக்கொள்ள முடியும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | செலவுகள் மூலதன மற்றும் மீண்டுவரும் என வகைப்படுத்தி பேணிச் செல்ல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறாயினும், இலங்கை போக்குவரத்து சபையினால் குறிப்பிடட ஏற்பாடுகளை மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவுகள் என செலவு வகைப்படுத்தலின் படி செலவுகள் பேணப்பட்டிருக்காமையால் அமைச்சினால் செலவு விபரம் வருட இறுதியில் பெற்றுக்கொள்ளாமையால் செலவுகள் தொடர்பாக உறுதிப்பாடொன்று பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | | |
| (இ) | கழிவறை முறைமை நிர்மாணிப்பதற்காக வெளித்தரப்பினர் ஒருவருக்கு ஒப்பந்த முறையில் செயற்படாமல் நேர் கூலி அடிப்படையில் நிர்மாணிப்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக தற்போது நிலவுகின்ற மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தலின் காரணமாக எதிர்பார்த்த மதிப்பீட்டு பெறுமதியாகிய ரூபா 4,991,395 தொகையை மிகைத்து ரூபா 6,021,248 இற்கான செலவொன்று 2021 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது மதிப்பீட்டில் 21 சதவீத அதிகரிப்பொன்றாகும். | வெளி பொருளாதார காரணிகள் காரணமாக நிர்மாணத்துறையில் மூலப்பொருள் விலைகள் அதிகரித்தல் மற்றும் விஷேடமாக தரையோடு சுப்புரவாக்கல் பண்டங்களின் விலைகள் அதிகரித்தல் காரணமாக மதிப்பீட்டு ஏற்பாடுகள் 35 சதவீத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையினால் மிகைக்கக்கூடியதாக இருந்தது. | அரசுக்கு உச்சமட்ட அநுகூலம் ஏற்படக் கூடிய வகையில் மதிப்பீட்டு ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மேற்கூறிய செயற்திட்ட செலவு மதிப்பீட்டை மிகைத்திருந்த போதிலும், கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட செயற்திட்டத்தின் மேலும் 30 சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வேலைப் பகுதி ஒன்று பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது என. இதற்காக பயிற்றப்பட்ட தொழிலாளர்களுடனான அதிகமான மனித நாட்கள் எடுக்கக் கூடியதாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக மதிப்பீட்டுக் கிரயம் கூடிய சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு சந்தர்ப்பம் இருப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டப் பிரிவில் உத்தியோகத்தர்கள் கொவிட் தொற்றினால் பாதிக்கப்படல் சந்தையில் பண்டங்களுக்கான தட்டுப்பாடின் காரணமாக மற்றும் பௌதீக முரண்களுக்காக தேவையான பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத மதிப்பீட்டு ஏற்பாடுகளை மிகைக்கக் கூடியதாக இருந்ததுடன், அதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டு செலவு மதிப்பீட்டை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூடிய அளவு அரசுக்கு குறைந்த பொறுப்பு ஏற்படக் கூடிய விதமாக மதிப்பீடு தயாரிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **விளைவற்ற சொத்துக்கள்** | | |
| 2021 ஆண்டின் போது ரூபா 343,960 இற்கான செலவொன்று மேற்கொண்டு அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மடிகணினிகள் 2022 ஆண்டின் ஏப்ரல் இறுதி வரை பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | மடிகணினி இராஜாங்க அமைச்சரின் ஊடகச் செயலாளருக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்த போதிலும், ஊடகச் செயலாளருக்கு ஒப்படைப்பதற்கு ஆயத்தமான சந்தர்ப்பத்தில் அதில் குறைபாடொன்று கண்டறிந்தமையால் அதனை வழங்காமல் தடுத்து வைக்கப்பட்டது. | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங் கண்டு கொள்வனவு செய்தல் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டியிருந்தது. |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள் பரிசோதனை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விபத்துக்குள்ளாகிய இரண்டு வாகனங்களின் காப்புறுதியின் மூலம் உள்ளடக்கப்படாத ரூபா 60,223 இற்கான திருத்த வேலைச் செலவு பதிவழிக்கப்படாத செலவுகளை என கணக்குகளில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் 05 வாகனங்களின் விபத்துத் திருத்தச் செலவாகிய ரூபா 593,350 இற்கான தொகை பதிவழிக்கப்படாத நட்டம் என பிழையான முறையில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | வாகன விபத்து தொடர்பாக ஏற்பட்டிருந்த நட்டம் முழுமையாக அங்கு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் எதிர் காலத்தில் அதனை சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிப் பரிசோதனையின் போது 09 பதவிகளில் 48 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. | அமைச்சிற்கான நிரந்தர பதவியணியில் முகாமைத்துவ சேவை அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர் காணப்படாததுடன், 2022 ஆண்டு முதல் நிரந்தரப் பதவியணிக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |